**கடுகண்ணாவ நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுகண்ணாவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுகண்ணாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத்தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான

உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுல் மங்கூஸ் வத்த காணி அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 250,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்படுவதால் அதன் போது மூலதனமாக்குவதற்கு பதிவுசெய்து கொள்ளப்பட்டதாக | காணி அபிவிருத்திக்கான செலவு மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் அனுமதியற்ற நிர்மாணங்கள், கடை வாடகை செலுத்தாமை தொடர்பில் சபைக்கு எதிராக 08 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வழக்கை வெளிப்படுத்துவதாக | நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதி 06 மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் திசெம்பர் மாதத்திற்குரிய நீதிமன்ற தண்டப்பணம் என்பன அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வு கூறல் மேற்கொள்ள முடியாததுடன் வருடத்தில் கிடைக்கப் பெற்ற தொகைகளை மாத்திரம் கணக்கீடு செய்துள்ளதாக. | சபைக்காக அந்த வருமானங்களை சேகரித்து நிறுவனத்திடம் விசாரித்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,367,771 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 458,299 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) வீதவரி** | | | |
| (i) | பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் புதிய கட்டிட நிர்மாணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவீடு செய்யப்படாததனால் சபைக்கு ரூபா 2,642,028 தொகை வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | உரிய காலத்தில் வரி செலுத்துமாறு தெரியப்படுத்தியுள்ளதுடன் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக. | புதிய கட்டிட நிர்மாணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும் நகரசபை அதிகாரப்பிரிவில் 2012 ஆம் ஆண்டு செய்த மதிப்பீட்டின் படியே வரி அறவீடு செய்யப்படுகின்றது. | மதிப்பீடொன்றிட்கு 05 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் 2016 ஆம் ஆண்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு புதிய மதிப்பீடு தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக. | 05 வருடங்களுக்கு ஒருமுறை வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) ஏனைய வரிகள்** | | | |
| | கடுகண்ணாவ வாடி விடுதியின் ஒப்பந்தக்காலம் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டிருந்தும் குத்தகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 293,629 தொகை நிலுவையாக இருந்ததுடன் மற்றும் துண்டிக்கப்பட்டிருந்த நீர் வழங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளவதற்கான கட்டணம் ரூபா 8,100 தொகையும் அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருக்க வில்லை. | அந்த நிலுவைத் தொகையை அறவிட்டுத் தருமாறு மத்திய மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பரிசோதகரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | அறவிட வேண்டிய நிலுவை வீத வரி மற்றும் நீர்ப் பட்டியல் கட்டணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.2 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கடை வாடகை ரூபா 739,094 தொகை நிலுவையாக இருந்ததுடன், அவற்றில் 17 கடைகளின் நீண்ட காலமாக நிலுவையபக காணப்படும் ரூபா 290,469 தொகை மீதியும், பழைய வியாபார கட்டிடத் தொகுதியில் 2007 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்குரிய 04 கடைகளின் நிலுவை கடை வாடகை ரூபா 151,369 தொகை மீதியும் உள்ளடங்கும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | நிலுவை கடை வாடகை அறவீடு விரைவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 09 ஆம் இலக்க கடை அறை தொடர்பாக இதுவரை ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 09 ஆம் இலக்க கடை அறை தொடர்பாக ஒப்பந்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி குத்தகைக்கு வழங்கும் போது 05 வருடங்களுக்கு ஒரு முறை குத்தகைத் தொகையை மீளாய்வு செய்வதற்கு அல்லது நகர சபை அதிகார எல்லைகளில் மதிப்பீட்டு குத்தகை வாடகைத் தொகை 50 சதவீதத்தினால் அதிகரித்து குத்தகை தொகை மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்தும் 22 காணி துண்டுகள் வருடாந்த குத்தகை வாடகை மதிப்பீட்டின் போது காணப்பட்ட வாடகை தொகை 10 சதவீதம் சேர்க்கப்பட்டு வாடகை திருத்தப்பட்டிருந்தது. | காணிகள் அளக்கப்பட்டு வேறாக்கப்பட்டதன் பின்னர் மதிப்பீட்டிற்கு உற்படுத்தி வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | காணி குத்தகைக்கு வழங்கும் போது 05 வருடங்களுக்கு ஒரு முறை குத்தகைத் தொகையை மீளாய்வு செய்வதற்கு அல்லது 50 சதவீத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறவேண்டிய கடன் பட்டோர் கணக்கு மீதி ரூபா 4,519,896 ஆக காணப்பட்டதுடன், 01 முதல் 03 வருட காலத்திற்கு உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 735,636 தொகையாகும். 03 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 373,226 ஆக காணப்பட்டது. | இம்மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,625,762 ஆகும். 01 முதல் 03 வருட காலத்திற்கு உற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,461,814 தொகையாகும். 03 வருடங்களை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 638,258 ஆகவும் காணப்பட்டது | செலுத்த வேண்டிய மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபாரக் கட்டிடத் தொகுதியில் 18 கடை குத்தகை வாடகை அடிப்படையில் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபாரக் கட்டிடத் தொகுதியின் புதிய வரி மதிப்பீட்டுத் தொகையை கடை உரிமையாளர்கள் ஏற்றுக் கொள்ளாததனால் ஒப்பந்தம் செய்வதற்கு தாமதம் ஏற்பட்டதாக. | புதிய மதிப்பீடுகளின் படி ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லைக்குட்பட்ட 575 ஆம் இலக்க கட்டிடத்தில் காணப்படும் 04 கடைகள், பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் உபதலைவரின் வீட்டின் பின்புரம் அமைக்கப்படும் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தில் புதிதாக பகுதியொன்று அமைக்கப்படுமாயின் அது தொடர்பில் தேவையான ஆலோசனைகள் மற்றும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பில் சட்டங்கள் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல வருடங்களாக மிகக்குறைந்த பெறுமதியில் காணப்படும் சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் நடைமுறைப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுவதற்கு பதிலாக சபையின் வருமான மதிப்பீட்டாளரினால் ரூபா 921,808,600 பெறுமதியான ஆதனங்கள் ரூபா 58,450,000 ஆக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சபைக்குரிய சகல சொத்துக்களும் எதிர்காலத்தில் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக. | சபைக்குரிய சகல சொத்துக்களின் பெறுமதியும் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 9,367,144 தொகை பெறுமதியான சபைக்குரிய 02 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படாது செயளற்று காணப்பட்டது. | உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுப்பதற்காக வாகனங்கள் புதுப்பிக்கப்பட்டு பாவனைக்கு எடுப்பதாக. | சபைக்குரிய வாகனங்கள் செயலற்று வைக்காமல் புதுப்பிக்க அல்லது ஏலவிற்பனை செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு கண்டி வீதியில் அமைந்துள்ள பழைய நகரசபை கட்டிடம் அமைந்துள்ள காணி தொடர்பாக புகையிரத திணைக்களத்திற்கு இதுவரை ரூபா 3,376,337 தொகை குத்தகையாக செலுத்தியுள்ளதுடன் அந்த கட்டிடம் பயனுள்ள எந்த நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாமல் செயளற்று காணப்பட்டது. | புகையிரதத் திணைக்களத்துடன் குத்தகை ஒப்பந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் மற்றும் காணி நகரசபைக்கு தேவையாவதுடன் நிலுவை குத்தகை தொகை செலுத்தி முடிக்கப்பட்டதாகவும். | குத்தகைத் தொகை செலுத்தப்பட்டு பெறப்பட்ட ஆதனங்களிலிருந்து உரிய முறையில் வருமானம் ஈட்டல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாகத்தினது குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் வீடொன்றின் முற்றம் விஸ்தீரணப்படுத்தப்படுவதால் வீதிக்கு ஏற்படும் சேதத்தினை தடுப்பதற்கு என குறிப்பிட்டு ரூபா 145,714 தொகை பொது நிதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு தனியார் வீடொன்றைப் பாதுகாப்பதற்காக மதிலொன்று அமைக்கப்பட்டிருந்தது. | அந்த இடத்தில் பாதுகாப்பற்றதாக இருப்பதனை குறைப்பதற்காக பாதுகாப்பு மதில் அமைப்பது அவசியம் என தீர்மானிக்கப்பட்டதாக. | தனியார் இடங்களைப் பாதுகாப்பதற்காக சபை நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிப்புகள் செய்யப்படலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் வருடத்தில் ரூபா 849,831 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கடுகண்ணாவ பள்ளி வீதி பாதுகாப்பு மதில் கஸிரு மாற்றத்திற்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | மதில் அமைக்கும் போது ஒவ்வோரு நேரமும் பரிசோதிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் பரிசோதிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முறைப்படியாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அவதானிக்கப்பட்டதாக. | சபை நிதியத்தினால் செலவீடு செய்து நிர்மாணிக்கும் போது உரிய தொழில்நுட்ப அல்லது தரம் தொடர்பாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | அதுபன்னவத்த வீதி அபிவிருத்தி தொடர்பாக ரூபா 476,538 தொகை செலவீடு செய்து நிர்மாணிக்கப்பட்ட வடிகாண் வீதியின் அரைவாசி வரை நிர்மாணித்துள்ளமை மற்றும் நீர் வீதியின் குறுக்காக செல்வது என்பவற்றினால் வீதியின் நீண்டநாள் பயன் உறுதிப்படுத்தப்படவில்லை. | வீதியினை நிர்மாணிப்பதற்கு முன் பழைய வீடொன்றிட்கு செல்வதற்காக பயன்படுத்தப்படும் நுழை வாயிலாக இருப்பதனால் வடிகாண் முறையை நீளமாக்கும் போது அதனை திருத்தியமைப்பதாக. | நிர்மாணிப்பு தொடர்பாக பணம் செலுத்தும் போது தொழில்நுட்ப மற்றும் அளவீட்டு அறிக்கைகளுக்கமைய கொடுப்பணவு செய்யப்படல் வேண்டும். |